
உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சுபகிருது வருடம் ஆவணித் திங்கள் ஆகஸ்ட் 2024 | பூமி–16




**நல்லூர் ஆலயத்தை அறுபது ஆண்டுகளாக சீரிய முறையில் வழிநடத்திய அமரர் குகசிறீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் தம்பதிகளை நல்லூர் உற்சவ காலத்தில் நன்றியுடன் நினைந்து வணங்குகிறோம்.**



## எம் மண்ணை நீ தான் காக்க வேண்டும்...! நல்லூர் முருகா.....!!!

தமிழர்களின் வரலாற்றில் தனித்துவம் மிக்க திருக்கோயிலாக விளங்கும் நல்லூர் கந்த பெருமானுடைய பெருந்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று கொண்டிருக்கிறது. அதிகூடிய யாழ்ப்பாணத்து மக்கள் வழிபாடு செய்கின்ற திருக் கோவிலாக நல்லூர் கந்தசுவாமி கோயில் விளங்குகிறது. எமது தலைமுறையை சரியான முறையில் ஆற்றுப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைவது கோவில் திருவிழாக்கள் ஆகும். நல்லூர் திருவிழா என்பது ஒரு மதம் சார்ந்த விழா என்பதற்கு அப்பால் இனம் சார்ந்த சமூகம் சார்ந்த விழாவாக மாற்றம் பெற்றிருக்கிறது. யாழ்ப்பாணத்து மக்கள் எல்லாம் மகிழ்ச்சியாக திரண்டு வருவார்கள். சைவ மக்கள் மட்டும் இன்றி கிறிஸ்தவ மக்களும் நல்லூர் கந்தனை தரிசிக்க வருவார்கள். இளைஞர்கள் இவ் சந்தோஷமான காட்சியைக் கண்டு களிப்பார்கள். நல்லூர் மகோற்சவம் தொடங்கி விட்டால் இளைய தலைமுறையினர்

அதிகாலையிலேயே அங்க பிரதஷ்ணம் செய்வார்கள். இதனை வேறெங்கும் காண முடியாது. ஆயிரமாயிரம் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து காலையிலேயே அங்க பிரதஷ்ணம் செய்வார்கள். அதுமட்டுமின்றி பெண்கள் குறிப்பாக கன்னி பெண்கள் அடி எடுத்து வைத்து வழிபடுவார்கள். காலை முழுவதும் நல்லூர் வீதியிலேயே முருகா முருகா என்று ஓயாது ஒலித்த வண்ணம் செவிகளுக்கு கேட்கும்.

நல்லூர் முருகா எம் மண்ணை நீ தான் காக்க வேண்டும். அறமே அருகி போகும் சூழ்நிலையில் எம் மண்ணில் எல்லாமே தலைவிரித்து ஆடுகின்றது. எவரிடமும் நீதி இன்றி நேர்மை இன்றி உண்மை தன்மை இன்றி இருக்கும் சமூகம் தத்தளிக்கிறது. கற்றவர்களிடமும் இன்று அறம் வற்றிப் போகிறது. ஆரசியல் வாதிகளிடம் அறம் என்பது கேள்வி குறியாகி விட்டது. சுமூகத்தை வழி நடத்த வேண்டியவர்கள் வாய்ப்பிற்கு ஏற்றாற் போல் கருத்துக்களை கூறிக் கொண்டு இருக்கிறார்கள். நல்லூர் முருகா நம்மை ஆளும் பெரும் சக்தியாக விளங்குகின்ற வெற்றி வேலாயுதனே தீமைகள் இல்லாத ஒரு நல்ல உலகினை நல்ல பாதையினை இம் மண்ணிற்கு காட்ட வேண்டும். ஏங்கள் தலைமுறை வீணாக அழிந்து போகாது அவர்களை ஆற்றுப் படுத்த வேண்டும்.

பொதுவாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் சனத்தொகை வளர்ச்சி வீதம் என்றும் இல்லாத அளவுக்கு குறைந்து கொண்டு செல்கின்றது. இன்றும் படித்தவர்கள் புலம்பெயர்ந்து கொண்டே இருக்கிறார்கள். போர் முடிந்தும் சொந்த மண்ணை விட்டு செல்பவர்கள் எண்ணிக்கை குறையவில்லை. இனி வரும் காலங்களில் என்ன நடக்குமோ என்ற ஏக்கம் அனைவரையும் வருத்துகின்றது.

நல்லூர் கந்த பெருமானே "தீயுக விழுந்தாரேனும் குமர வேலன் திருமுன்னுற்றால் தூயவராகி துல்கதி அடைவர்" என்று கந்தபுராணத்திலே கச்சியப்பர் குறிப்பிட்டுள்ளார். நாங்கள் ஏதேனும் தவறிலைத்து இருப்பின் எம்மை மன்னித்து நல்லதோர் பாதையினை காட்டி எம் நிலத்திடையே ஒற்றுமை, தூய நிதானத்துடன் பிறருக்கு தீமை எண்ணாத மனப்பாங்கு வளர, வாழ வழி செய் நல்லூர் கந்தா!

கலாநிதி. செஞ்சொற்செல்வர்.
ஆறு. திருமுருகன்


ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்.
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச.சந்தோஷன்

வடிவமைப்பாளர்
திருமதி. ச. மதுஷா

அட்டைப் புகைப்படம்
திரு. ஜெ. திலக்ஷன்


# வைத்திய நிபுணர் சரவணபவாவுக்கு யாழ். விருது வழங்கி கௌரவிப்பு

நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மல ரின் 32 ஆவது இதழ் வெளி மீட்டு விழாவும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் நேவைத்திய நிபுணர் சரவணபவாவுக்கு யாழ். விருது வழங்கி கௌரவிப்பு

நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் வரு டந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலரின் 32 ஆவது இதழ் வெளியீட்டு விழாவும் யாழ் விருது வழங்கும் நிகழ்வும் 15.08.2024 காலை 9 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் யாழ் மாநகரசபையின் ஆணையாளர் ந.கிருஷ்ணேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பெண் நோயியல் வைத்திய நிபுணர் ந.சரவணபவாவின் அர்ப்பணிப்பு மிக்க வைத்திய சேவைகளைப் பாராட்டி யாழ் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவால் உயர் விருதான யாழ்.விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். வைத்திய நிபுணர் தனது வாழ்க்கைத் துணைவியுடன் இணைந்து குறித்த விருதைப் பெற்றுக் கொண்டார்.



# சிறப்பாக நடந்த சிவபூமி தெய்வக் குழந்தைகளின் விளையாட்டு போட்டி









பிறப்பில் சில குறைபாடுகளுடன் பிறந்த இந்தப் பிள்ளைகளை தெய்வக் குழந்தைகள் என்று பெயர் சூட்டி கல்வியிலும், விளையாட்டிலும், சுய தொழில் ஊக்குவிப்பிலும் சிறப்பாக பணியாற்ற வைத்துக் கொண்டு இருக்கும் சிவபூமி அறக்கட்டளையின் தெய்வக் குழந்தைகளுடைய இல்ல விளையாட்டுப் போட்டி 07.08.2024 நடைபெற்றது.

இவ் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி தங்களது திறமைகளை சகல தெய்வக் குழந்தைகளும் சிறப்பாக வெளிப்படுத்திய காட்சியைப் பார்த்த பெற்றோர்கள் இது எங்களுடைய பிள்ளையா? என பார்த்து மனமுருகி ஆனந்த கண்ணீர் வடித்த காட்சி பார்ப்பவர் மனங்களை கலங்க செய்தது.

மூன்று தடவைகள் சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றி பதக்கங்கள் பெற்று நாட்டிக்கு பெருமை தேடித் தந்த மாணவர்கள் இந்த பாடசாலையில் இருந்தே சென்றார்கள். இலங்கை அரசாங்கத்தால் நாடுமுழுவதும் உள்ள மனவிருத்திப் பாடசாலைகள் தரம் பிரிக்கப்பட்டு தேசிய ரீதியில் முதலாம் இடத்தினை கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை பெற்றுக் கொண்டது.

இவர்களுக்கே உரித்தான பல விளையாட்டுப் போட்டிகளில் மிகவும் ஆர்வமாக பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். சிவன், சக்தி என இரு இல்லங்களாக தெய்வக் குழந்தைகள் பிரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு இளம்பிறையன் தமது பாரியாருடன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக இங்கிலாந்தில் இருந்து வருகை தந்துள்ள தொழிலதிபர் ஜெயசீலன் தமது துணைவியாருடன் கலந்து கொண்டார். ஏராளமான பார்வையாளர்கள் பங்கு பற்றி தெய்வக் குழந்தைகளின் திறமைகளை கண்டு ஆனந்தம் அடைந்தார்கள்.









# பக்தி பூர்வமாக நடைபெற்ற தெல்லியூர் தேவியின் ஆடிப்பூர விழா






வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் ஆடிப்பூர உற்சவத்தில் பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டு அம்பிகையின் பேரருளை பெற்றார்கள். ஆடிப்பூரம் என்னும் விழா ஆடி மாதத்திலே பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது கொண்டாடப்படும் உற்சவம் ஆகும். சில அம்மன் ஆலயங்களில் ஆடிப் பூரத்தை அடிப்படையாக கொண்டு மகோற்சவங்களும் நிகழ்வது உண்டு.

# பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள் எழுதிய நூல்களின் வெளியீட்டு விழா



யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் அனுசரணையுடன் நேற்றைய தினம் மாலை 4.30 மணியளவில் யாழ். கலாசார நிலையத்தில் நடைபெற்ற பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள் எழுதிய இந்திய இலங்கை கல்வி சமய பண்பாட்டு பாலம் ஆறுமுகநாவலர் 200 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர், யாழ்ப்பாணத்தில் இந்திய ஆசிரியர்களின் கல்விப்பணி (கவிஞர் சோ.ப அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. The Contribution of Indian Teachers towards the Development of Education in Jaffna ) நூல்களின் வெளியீட்டு விழா நடைபெற்றது.



நூல்களினை யாழ்.இந்திய துணைத்தூதுவர் வெளியிட்டு வைக்க முதல் பிரதியினை சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.



# பக்தர்களுக்கு துணை நிற்கும் கீரிமலை சிவபூமி மடம்




ஆடி அமாவாசை தினம் என்பது இந்துக்களின் மிக முக்கியமான நாளாக கருதப்படுகின்றது. ஆடி அமாவாசை நாளில், அதிகாலையில் எழுந்திருத்தல், சமயச் சடங்குகள், கோவில்களுக்குச் செல்வது, முன்னோர்களுக்கு வழிபாடு செய்வது, தொண்டு செய்வது போன்றவை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்த நாளில் குலதெய்வங்களை வணங்கி வழிபடுவதன் மூலம் முன்னோர்களின் சுமைகளில் இருந்து விடுபடலாம் என்பது இந்துக்களின் நம்பிக்கை.


ஆடி அமாவாசையின் போது கடல் அல்லது புண்ணிய நதிகளில் நீராடினால் பாவங்கள் நீங்கும் என்பதும் நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் கீரிமலை புனித தீர்த்தத்தில் நீராடி தங்கள் முன்னோர்களுக்காக சமய சடங்குகளில் பங்கு பற்ற பல ஆயிரம் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் வருகை தருவார்கள். நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வரும் மக்களுக்கு தேவையான சகல வசதிகளையும் வழங்க சிவபூமி அறக்கட்ளையின் கீரிமலை சிவபூமி மடம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அதிகாலை 4.00 மணி தொடக்கம் மக்களுக்கு தேவையான தேநீர் வசதிகளை வழங்குதல், மதியம் அன்னதானம் வழங்குதல், மக்கள் இளைப்பாறி செல்வதற்குரிய தங்குமிட வசதிகளை வழங்குதல் என பல அறப்பணிகளை இந்த ஆண்டும் சிவபூமி அறக்கட்டளை மேற்கொண்டது. இந்த அறப் பணிகளுக்கு நீங்களும் விரும்பினால் பொருளாகவோ பண உதவிகளாகவோ வழங்க முடியும்.

தொண்மையும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலையில் அறத் தொண்டு செய்கின்றது இவ் புனித மடம். சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களினால் கடந்த 16.03.2011ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு கடந்த 28.01.2012ம் ஆண்டு




திறந்து வைக்கப்பட்டது. இவ் மடத்திற்குரிய இடத்தினை ஆசிரியாராக கடமையாற்றிய விஸ்வநாதன் அவர்களது குடும்பம் அன்பளிப்பாக வளங்கியது. இயற்கையும் ஆன்மீக சூழலும் நிறைந்த இந்த புண்ணிய இடத்தில் அறச் சிந்தனையினை வளர்க்கவும் ஆன்மீக தொண்டு செய்யவும் இவ் மடம் பெரிதும் உதவி புரிகின்றது. இவ் மடத்தின் உள்ளே தமிழர்களின் பண்பாட்டினையும் விழுமியங்களையும் எடுத்துச் சொல்லும் வகையில் பல கலைப் படைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வாரத்தின் ஒவ்வொறு ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் போயா தினங்களிலும் அன்னதானம் வழங்கப்படுவதுடன், விசேட தினங்கள் மற்றும் ஆடி அமாவாசை தினத்தில் விசேடமாக தேநீர் மற்றும் உணவு வழங்கப்படுகின்றது. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வருகை தரும் மக்கள் தங்குவதற்கும் இளைப்பாறிச் செல்வதற்கும் இவ் மடம் பெரிதும் உதவி புரிகின்றது. வியாபார நோக்கம் அல்லாமல் சேவை அடிப்படையில் மக்களுக்கு தொண்டு செய்கின்றது இவ் மடம். இங்கு உள்ள சிவபூமி கலையரங்கு கலைகளை வளர்க்கும் நிகழ்வுகளை நடாத்துவதற்குரிய முழுமையான வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. உலகில் உள்ள அனைத்து உயிர்களும் குறைவின்றி வாழ வேண்டும் என்ற ஒலி இங்கு உள்ள ஈசனின் சிலைக்கு முன்னால் ஒலிப்பது இதன் தனிச் சிறப்பாகும். இவ் மடத்திற்கு உதவி செய்ய விரும்புவர்கள் 0212227938 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள்.



# துர்க்கா மணிமண்டபத்தில் நல்லூரான் உற்சவகால இசை நிகழ்வு ஆரம்பம்

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் துர்க்கா மணி மண்டபத்தில், நல்லை கந்தப் பெருமானின், பெருந்திருவிழாவினை முன்னிட்டு நல்லூர் இளம் கலைஞர்களின் இசை நிகழ்வு கொடியேற்ற தினமான 09.08.2024 ஆரம்பமாகியது. இந்த இசை நிகழ்வு வைரவப் பெருமானின் உற்சவம் வரை 26 நாட்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது. தினமும் மாலை 6.00 மணிக்கு இசை நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெறுகிறது. பல திறமை-யான கலைஞர்கள் இவ் இசை நிகழ்வில் பங்குபற்றவுள்ளதால், நீங்களும் இந்த கலைஞர்களின் திறமைகளை ஊக்கப்படுத்தலாம்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் துர்க்கா மணி மண்டபத்தில் நல்லூர் கந்தப் பெருமான் உற்சவ காலத்தில் தினமும் அன்னதானம் வழங்கும் பணியை மேற்கொண்டு வருவதுடன், மாலையில் இலவசமாக கலைகளின் வளர்ச்சிக்கு வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது.



# சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. ஸ்ரீ கணேஷராஜனின் இரண்டு சட்ட நூல்கள் வெளியீடு



நாட்டின் சட்டத்துறைக்கு வலுச்சேர்க்கத்தக்க வகையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. ஸ்ரீ கணேஷராஜனினால் எழுதப்பட்ட இரண்டு சட்ட நூல்கள் பிரதம நீதியரசர் உள்ளடங்கலாக நாட்டின் சட்டத்துறைசார் வல்லுனர்கள் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (30.07.2024) வெளியிட்டு வைக்கப்பட்டது.

சட்டத்தரணி கே.வி. ஸ்ரீ கணேஷராஜனினால் எழுதப்பட்டிருக்கும் Cases and Materials on Law of Trusts (நம்பிக்கைப்பொறுப்பு சட்டத்தின் விடயதானங்களும், தீர்க்கப்பட்ட வழக்குகளும்) மற்றும் Cases and Materials on Charitable Trusts (தர்ம நம்பிக்கைப்பொறுப்பு சட்டத்தின் விடயதானங்களும், தீர்க்கப்பட்ட வழக்குகளும்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு (30.07.2024) மாலை 4.00 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவும், சிறப்பு அதிதியாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் கலந்துகொண்டதுடன் இவ்விரு நூல்களின் உள்ளடக்கம் தொடர்பில் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கே. கனகஈஸ்வரனால் விளக்கமளிக்கப்பட்டது. அதேவேளை மேற்குறிப்பிட்ட இரு நூல்களும் முறையே நாட்டின் பிரபல சட்டத்தரணிகளான மறைந்த ஏ.ஆர்.சுரேந்திரன் மற்றும் கந்தையா நீலகண்டன் ஆகியோருக்கு நூலின் எழுத்தாளர் கணேஷராஜனால் சமர்ப்பணம் செய்யப்பட்டது.

# நூற்றாண்டு விழா காணும் பரத நாட்டிய கலைஞர் ஏரம்பு சுப்பையா



இணுவிலைச் சேர்ந்த ஏரம்பு சுப்பையா (சனவரி 13, 1922 - சனவரி 11 1976) இலங்கையின் புகழ்பெற்ற பரத நாட்டியக் கலைஞரும் ஆசிரியரும் ஆவார். கொக்குவில் கலாபவனம் நாட்டியப் பள்ளியின் அதிபர் ஆவார். இவரது நூற்றாண்டு விழா மஞ்சவன்னப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் 19.08.2024 அன்று செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற உள்ளது. பிரதம விருந்தினராக பேராசிரியர் வ.மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஏரம்பு சுப்பையாவின் தந்தை யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த அண்ணாவியர் கதிர்காமர் ஏரம்பு. இவர் தனது பரம்பரையின் ஆரம்பத்தில் கலையிலிருந்த ஈடுபாடு காரணமாகக் கூத்து வடிவத்தில் காவடி, இசை நாடகம் போன்றவற்றை நடாத்தினார். அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் இந்தியக் கலைஞர்களை வரவழைத்து இலங்கை முழுவதும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தினார். ஏரம்பு அவர்கள் தனது மகனான சுப்பையா அவர்களை 1946ல் தமிழகத்திற்கு அனுப்பி பரதநாட்டியத்தை திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடமும், கதகளியை நடனக் கலாநிதி குரு கோபிநாத் அவர்களிடமும் சீரிய முறையில் கற்க வழி சமைத்தார்.

இந்தியாவில் திரு. சுப்பையா அவர்கள் ஜெமினியின் சந்திரலேகா, சக்ரதாரி ஆகிய திரைப்படங்களில் நடனமாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களின் நடனக் குழுவினர்களுடன் பல்வேறு இடங்களிலும் நடனமாடி நன்மதிப்புப் பெற்றார். பின்னர் இலங்கை திரும்பி கலைப்பணிகள் செய்வதில் காலடி எடுத்து வைத்தார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண்கள் அரங்கில் ஆடக்கூடாது என்ற நிலமை. அதையெல்லாம் உடைத்து அந்த நேரத்தில் யாழ் நகரத்து பெரிய கல்விமான்கள், கலைஞர்களின் புதல்விகளுக்கு நடனக் கலையைக் கற்பித்து மேடையேற்றியதன் காரணமாக ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.



அரசாங்கப் பாடசாலை நடன ஆசிரியராக முதல் நியமனம் பெற்றவரும் சுப்பையா அவர்களே. நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயத்தின் தனது ஆசிரியப் பணியைத் தொடங்கிய ஏரம்பு சுப்பையா, பின்னர் மண்டைதீவு மகா வித்தியாலயம், வேலணை மகா வித்தியாலயம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்டான்லி கல்லூரி), ஏழாலை மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் நடன ஆசிரியராகப் பணியாற்றினார். அத்துடன் தனிப்பட்ட வகுப்புக்களை ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் திரு. இராசநாயகம் என்பவரால் அமைக்கப்பட்ட நடனப் பாடசாலையில் ஆரம்பித்தார். அந்நிறுவனத்தினூடாக பல மாணவர்களை உருவாக்கினார்.

திரு. சுப்பையா அவர்கள் 1949ல் கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா பூரணம் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அதன் பின்னர் 1956ல் கொக்குவிலில் கலா பவனம் என்ற கலைக்கோயிலை உருவாக்கி கலை உலகில் மாபெரும் சாதனையை நிலைநாட்டியதுடன் பலருக்கு அரங்கேற்றமும் செய்து வைத்தார். தனது கலைக்கு வாரிசாக புதல்வி சாந்தினியை தனது குருநாதர் குருகோபிநாத்திடமே கதகளியையும், பரதசூடாமணி அடையாறு லட்சுமணனிடம்

பரத நாட்டியத்தையும் பயிற்றுவித்து அரங்கேற்றம் செய்து வைத்தார். அத்துடன் பல நடனப் போட்டிகளிலும் சுதந்திர தின விழாக்கள், விவசாய விழாக்கள் போன்ற விழாக்களிலும் பங்கு பற்றி முதலிடங்களைப் பெற்றதுடன் தங்கப் பதக்கங்களையும் பெற்றுக் கலையுலகில் பெருங்கொடி கட்டிப்பறந்தார்.

1960ல் யாழ் பிரதேச கலாமன்றம் இவருக்கு பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவித்தது. பின் கலைச்செல்வியினால் நடத்தப்பட்ட கலைவிழாவில் பொன்னாடை போர்த்தப்பட்டு கலைச்செல்வன் என்ற பட்டமும் அளித்துக் கௌரவிக்கப்பட்டார். அபிநய அரசகேசரி என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

கலைத் துறையிலே அரும்பெரும் சாதனைகளை ஆற்றிக் கலையுலகமே பெருமைப்படக் கூடியளவுக்கு வாழ்ந்த இவர் 11.01.1976ல் தனது 54 வது அகவையில் காலமானார். தந்தையால் கொக்குவிலில் ஆரம்பிக்கப்பட்ட கலாபவனத்தைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றார் மூத்த பெண் திருமதி சாந்தினி சிவனேசன். இவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ஆவார். தேசமான்ய விருது பெற்றவர்.

## இணுவில் நடைபெற்ற திருக்குறள் மாநாடு

யாழ்ப்பாணம், இணுவில் அறிவாலயத்தின் திருக்குறள், மாநாடும் கலைவிழாவும் 10.08.2024 நடைபெற்றன. நிகழ்வின் ஆரம்பத்தில் திருவள்ளுவரின் திருவுருவச்சிலை இணுவில் கோவில் வாசல் சந்தியிலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் தேவாரம் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் திருக்குறள் ஓதல் இடம்பெற்றது. வரவேற்பு நடனம் வரவேற்புரை தலைமையுரை என்பன இடம்பெற்றன. இணுவில் அறிவாலயத்தின் உப தலைவர் யோ.சுதந்திரன் வரவேற்புரை நிகழ்த்தியிருந்ததுடன், இணுவில் அறிவாலயத்தின் தலைவர் தலைமையுரையையும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தொடக்கவுரையையும் நிகழ்த்தியிருந்தனர்.

நிகழ்வில் தொடர்ந்து திருக்குறளில் அறிவு பற்றிய ஆராய்ச்சி, திருக்குறளில் சமணச் சார்பு குறித்த மெய்யியல் நோக்கு, திருவள்ளுவர் எனும் கவிஞன் என்ற தலைப்புக்களில் வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி அ.சண்மகதாஸின் தலைமையில் பேருரைகள் இடம்பெற்றன. நிகழ்வில் இல்வாழ்க்கை என்று திருவள்ளுவர் கூறும் கருத்தியல் சமகாலத்திற்கு பொருந்தக்கூடியது, பொருத்தமற்றது என்ற தலைப்பில் ந.தவசோதிநாதன் தலைமையில் பட்டிமன்றமும் நடைபெற்றது.





## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் தற்பொழுது சுன்னாகத்தில் வசிப்பிடமாவும் கொண்ட மகாஜனாக்கல்லூரி கனிஸ்ர பிரிவு அதிபரும் நீண்டநாள் ஆசிரியருமான (ஓய்வுநிலை) வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் 06.08.2024 செவ்வாய்கிழமை காலமானார். மூத்த ஆசிரியரான அன்னார் தனது தள்ளாத வயதிலும் பொது நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பித்து வந்தவர். அன்னாரது ஆத்மா இறைவன் திருவடிகளில் சரண்புக எல்லாம் வல்ல இறையை வேண்டுகிறோம்..

# மகிமைகள் நிறைந்த வரலட்சுமி விரதம்



கேட்ட வரங்கள் மட்டுமல்ல கேட்காத வரங்களையும் கொடுப்பாள் அன்னை வரலட்சுமி. வரலட்சுமி விரதம் இருக்கும் பெண்களுக்கு மாங்கல்ய பலம் நீடிப்பதோடு செல்வம், தைரியம், வெற்றி, அரசு பதவி, குழந்தைப் பேறு, கல்வி உள்ளிட்ட எல்லா வளங்களும் வந்து சேரும்.

***புராண கதை:***

முன்னொரு காலத்தில் சிவனும் பார்வதியும் சொக்கட்டான் ஆடும் பொழுது யார் ஜெயித்தார்கள் என்று சண்டை வந்தது. அப்போது அங்கிருந்த சித்ர நேமி என்ற கணதேவதை நியாயம் கேட்டார்கள். அவன் ஒரு தலைப் பட்சமாக சிவன் ஜெயித்ததாக கூறினான். பார்வதி கோபம் கொண்டு அவனை குஷ்ட ரோகியாக ஒளியிழந்து தவிப்பாயாக என்று சபித்து விட்டாள். பின்னர் சிவபெருமான் அவனுக்கு சாப விமோசனம் தருமாறு பார்வதியிடம் கேட்க பார்வதியும் எப்பொழுதுஅழகிய தடாக தீர்த்தத்தில் தேவகன்னிகைகள் புண்ணியமான விரதத்தை அனுஷ்டிப்பார்களோ அப்பொழுது உன் சாபம் நீங்கும் என்று கூறினாள். அதன் பிறகு சித்ர நேமி ஒரு தடாக கரையில் குஷ்ட ரோகியாக வசித்து வந்தான்.

பல காலத்திற்கு பிறகு அங்கு தேவ கன்னிகைகள் வந்து தேவி பூஜையில் ஈடுபடுவதைக் கண்டு தன்னைப்பற்றி கூறி தாங்கள் அனுஷ்டிக்கும் விரதம் பற்றி கூறுமாறு கேட்டான். அவன் மேல் பரிதாபம் கொண்ட கன்னிகைகள் தாங்கள் அனுஷ்டிப்பது வரலஷ்மி விரதம். சூரியன் கடகத்தில் இருக்கும் போது கங்கையும் யமுனையும் சேரும் காலத்தில் துங்கபத்திரா நதிக்கரையில் சிராவண மாதத்தில் சுக்லபக்ஷ த்தில் வெள்ளிக்கிழமையில் முறைப்படி மஹாலஷ்மியை பற்றியதான இந்த விரதத்தை தொடங்க வேண்டும். என்று விரதம் பற்றி கூறினார்கள். அவர்கள் செய்த பூஜையை கண்ட சித்ரநேமிக்கு குஷ்டம் நீங்கி மீண்டும் கைலாயம் சென்றான்.

பார்வதி தேவியும் இந்த விரதத்தை அனுஷ்டித்து ஷண்முகரை பெற்றாள்.விக்ரமாதித்தன் இவ்விரதம் கடைபிடித்து நந்தனிடமிருந்து ராஜ்யம் பெற்றான். நந்தனின் மனைவி அனுஷ்டித்து பிள்ளைப்பேறு பெற்றாள். குண்டினம் என்ற நகரத்தில் வசித்த சாருமதி என்ற பெண் இவ்விரதமிருந்து சகல சௌபாக்கியமும் பெற்றாள்.

வரலட்சுமி விரத நாளில் புண்ணிய நதிகளில் நீராடலாம். இது ஓராண்டு லட்சுமி வழிபாட்டுக்குரிய பலன்களை நமக்குத் தரும். வரலட்சுமி பூஜை தினத்தன்று சுமங்கலி பெண்களுக்கு மஞ்சள், குங்குமம் கொடுத்து வணங்கினால் நல்லது. வரலட்சுமியை எந்த அளவுக்கு தாமரை மலர்களால் அலங்கரித்து வழிபாடு செய்கிறோமோ, அந்த அளவுக்கு புண்ணியம் சேரும். மகாலட்சுமிக்கு மஞ்சள் நிறப்பட்டு என்றால் பிரியம் அதிகம். லட்சுமி, அனைவருக்கும் நன்மை தருபவள் என்று அதர்வன வேதத்தில் கூறப்பட்டுள்ளது. லட்சுமி, வழிபாட்டின் போது மறக்காமல் அஷ்டலட்சுமி ஸ்தோத்திரம் சொல்வது மிகவும் நல்லது. வரலட்சுமி தினத்தன்று அன்னம், பருப்பு, வடை, பாயசம், கொழுக்கட்டை, அப்பம், இட்லி முதலியவற்றுடன் பழவகைகளை நைவேத்தியம் செய்ய வேண்டும். வரலட்சுமி பூஜைக்கு கொழுக்கட்டை நைவேத்தியமே பிரதானமானது. வரலட்சுமி பூஜையின் போது அருகம்புல்லை தூவி வழி பட்டால் கூடுதல் பலன்கள் கிடைக்கும். வரலட்சுமி பூஜைக்கு பயன்படுத்தும் கும்பத்தை பிறகு பத்திரப்படுத்தி, சுத்தமான இடத்தில் வைத்துக் கொள்ளலாம். வேறு பூஜைகள் நடத்தும் போது அதை பயன்படுத்தலாம்.

அன்னை மகாலஷ்மியை மகிழ்விக்கும் இந்த விரதமிருக்கும் பெண்மணி இவ்வுலகில் சகல போகங்களையும் பெற்று அனுபவித்தபின் வைகுந்தம் சேருவாள். எல்லா சுக்லபட்ச வெள்ளிக்கிழமைகளில் மஹாலஷ்மியை முறைப்படி பூஜிப்பவர்கள் வாழ்நாள் முழுதும் செல்வ செழிப்புடன் ஆரோக்கியமாக வாழ்வார்கள். அவர்கள் குடும்பம் தழைக்கும். வரலட்சுமி விரதக்கதையை படிப்பவர்கள் கேட்பவர்களும் வரலஷ்மியின் அருளால் தனதான்ய சம்பத்துடன் சௌக்கியமாக வாழ்வார்கள் என தேவர்கள் வாழ்த்துகின்றனர்.

# கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் மாவைக் கந்தன் தீர்த்தோற்சவம்

மாவிட்டபுரம் கந்தனின் வருடாந்த மகோற்சவம் ஆடி அமாவாசை தினத்தை தீர்த்தோற்சவமாக கொண்டு ஆரம்பமாவது வழமை. அது போல இந்த வருட வருடாந்த மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்று தீர்த்தோற்சவம் அன்று கீரிமலை கண்டகி தீர்த்தக்கரைக்கு மாவிட்டபுரம் கந்தப் பெருமான் வருகை தந்தார். அந்த நேரம் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானும் நகுலேச்சரத்தில் இருந்து புறப்பட்டு கண்டகி தீர்த்தக்கரைக்கு எழுந்தருளினார்.


சைவ மக்கள் பிதிர்க்கடன் கருமங்கள் ஆற்றும் இப்புண்ணிய ஆடி மாத அமாவாசை நன்நாளில் ஈழத்தின் தொன்மையான வரலாற்றுக்கு சான்றாக விளங்கும் இரண்டு ஆலய மூர்த்திகளும் கீரிமலை தீர்த்தக்கரையில் பக்தர்கள் புடைசூழ நீராடிய காட்சி கண்களுக்கு விருந்தாகியது.











# கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் தாளையடியில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் படி தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வு 02.08.2024 அன்று நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் நீர் வழங்கல் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்த ஜனாதிபதி, யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் திட்டம் மற்றும் 'யாழ்.நதி' மூலம் வடக்கின் குடிநீர் தேவைக்கு முழுமையான தீர்வுகளை வழங்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல் நீரை நன்னீராக்கும் நிலையமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்படுகிறது.







# யாழில் சூரிய காந்தி தோட்டம்

யாழ்ப்பாணம் அராலி மத்தி ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள வயல்வெளியில் பட்டதாரி இளைஞனான விதுஷன் அவர்களால் பயிரிடப்பட்டுள்ள சூரியகாந்தி மலர் தோட்டம் இதுவாகும்.

தற்போது இந்த சூரியகாந்தி மலரினை பார்வையிட பலரும் வருகை தந்து புகைப்படங்கள் எடுத்து வருகின்றனர்.









# செல்வச்சந்நிதியானின் அற்புதங்களும் அதிசயங்களும்

பாபுஜி



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகப்பெருமானின் ஆலயமானது கந்தபுராண வரலாற்றுக் காலத்தில் இருந்து ஆரம்பமாவதாக வரலாறு கூறுகின்றது. அந்த வகையில் தொண்டைமான் ஆறு எனும் பெயருடன் சந்நிதி ஆலயத்திற்கு பின்புறம் உள்ள கடல் நீர் ஏரியானது ஆரம்பகாலத்தில் வல்லைவெளியில் இருந்து மழைநீர் வழிந்தோடும் தாழ்நிலப்பகுதியாக வல்லைவெளி, வெளிலங்கிராய் , தொண்டைமானாறு பெருங்கடலுடன் இணைகின்றது. இவ்வாறு ஆறு பெருங்கடலுடன் இணையும் பகுதி ஆற்றுவாய் என்று கூறப்படும். ஆற்றுவாய்க்கு அருகில் வலி.கிழக்கு பிரதேச சபையும் வடமராட்சியையும் இணைக்கும் தொண்டைமானாறு பாலம் அழகான தோற்றத்தில் அமைந்திருப்பதும் சந்நிதி வேலனின் அருளாட்சியே. பாலத்தின் அடிவாரத்தில் பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த மு.நவரத்தினசாமி (ஆழிக்குமரன்) யின் கம்பீரமான சிலை தொண்டைமானாறு மக்களுக்கு முயற்சிக்கான வீரத்தினைத் தருகின்றது.

வல்லைவெளியானது ஆரம்ப காலங்களில் வல்லியப்பெரும்வெளி என்னும் பெயருடன் இருந்துள்ளது . அதற்கு ஆதாரமாக தற்போது அப்பிரதேசங்களை உள்ளடக்கிய காணி உரிமையாளர்களின் உறுதிகளில் காணிப்பெயர் வல்லியப்பெரும்வெளி என்னும் பெயரில் உள்ளது. வல்லியப்பெரும் வெளியில் இருந்து தொண்டைமானாறு வரை ஓடும் கடல் நீரேரி வல்லியாறு என்று ஆரம்பகாலத்தில் பெயர் கொள்ளப்பட்டுள்ளது . கந்தபுராணத்திலும் முருகப்பெருமானின் தூதுவராக அனுப்பப்பட்ட வீரபாகு தேவர் சூரனிடம் தூது செல்லும் வழியில் சந்திக்காலம் வரவே கால்பதித்து தரித்து வல்லியாற்றில் ஸ்ஞானம் செய்து ( உடல் கந்தம்) கொண்டு வந்த வல்வை இணை ஆற்றுக்கரையோரம் இருந்த பூவரசம் மரத்தடியில் நிறுத்தி சந்திக்காலப் பூசையினைச் செய்து முருகப்பெருமானை வழிபட்டு பின்னர் அவர் தான் வந்த வேலையான தூது செல்லும் பணிக்கு புறப்பட்டுச் சென்றார்.


தேவியினால் பார்வதி தேவியின் காற்சிலம்பில் இருந்து உதிர்ந்த நவரத்தினங்களாகிய நவவீரர்களில் மூத்தவரே வீரபாகு தேவராவர். ஒரு விதத்தில் வீரபாகு தேவர் முருகப்பெருமானின் சகோதரராகவும் பார்க்கப்படுகின்றார். ஞானம் உடைய முருகப்பெருமானின் போர்ப்படைக்கு வீரம்மிக்க தலைவனாக இருந்த வீரபாகுதேவர் அவர்கள் கால்பதித்து இறங்கி முகாமிட்டு இருந்து முருகப்பெருமானுக்கு சந்திகால பூஜை செய்த இடம் என்றால் அவ்விடத்திற்கு ஞானமும், வீரமும், தானாக வந்தவிடும் அல்லவா! வீரபாகு தேவர் கால்பதித்த இடம் ஆலயத்திற்கு வடக்குப் பக்கம் உள்ள கல்லோடை எனினும் பகுதியாகும். இதனால் சந்திதி வேலனுக்கு "கல்லோடைக்கந்தன் " என்னும் பெயரும் உண்டு. சந்நிதி வேலனிடம் வரும் அடியார்கள் பலரும் இப்போது வீரபாகுதேவர் கால்பதித்த கால்ச்சுவட்டினை வணங்கி செல்கின்றார்கள். அவ் புனித பாதச்சுவடு இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி தொண்டைமானாறானது வல்லைவெளி கரணவாய் , குடத்தனை, ஆனையிறவு , முல்லைத்தீவு வரை தாழ்நிலங்கள் ஊடாக தொடர்புபட்டு உள்ளது. இதனால் முல்லைத்தீவு கண்ணகி அம்மனின் அருளாட்சி பெற்ற இடமென்பதால் அங்கிருந்து ஓடிவரும் புனித நீரானது தொண்டைமானாறு வழியாக ஒடுவதினால் சந்நிதி வேலவனின் மூலஸ்தானத்தில் கண்ணகி அம்மனுக்கும் ஓரிடம் உள்ளது. கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடல் உப்புநீரில் விளக்கு எரிவதைப் போல் செல்வச்சந்நிதியிலும் மகோற்சவத்திற்கு முன் ஆனி, ஆடி மாதத்தில் ஒரு திங்கட்கிழமை இரவு தீர்த்தமெடுப்பு பூசை நடைபெற்று அடுத்த திங்கள் வரை அவ் உப்பு நீரில் விளக்கு எரிந்து அத் திங்கள் குளிர்ச்சி பொங்கலும் நடைபெறும்.

செல்வச்சந்நிதிக்கும் கதிர்காமக்கந்தனுக்குமான தொடர்பாக கதிர்காம காடுகளில் ஐராவத எனும் யானை சாபவிமோட்சனம் தேடி அலைந்து திரிந்தது. ஐராவசு என்பது தேவலோகத்தில் பணிபுரியும் இறைதூதுவர் ஒருவராவர். இறை தூதுவரான கந்தர்வன் தேவலோகத்தில் செய்த சிறு தவறுக்காக வியாழபகவானால் சாபத்துக்கு உள்ளாகி கதிர்காமக் காடுகளில் ஐராவசு என்னும் யானையாக சாப விமோட்சனம் தேடி அலைந்து திரிந்தது . அக் காலப்பகுதியில் அக்காட்டுப்பகுதியால் சென்ற சிகண்டி முனிவரைத் தாக்குவதற்காக கோபத்துடன் செல்கின்றது. அதனைக் கண்ணுற்ற சிகண்டி முனிவர் தான் செல்லும் பாதையின் ஓரத்தில் நின்ற வெற்றிலைக்கொடியின் இலையை பறித்து வேலாக மாறி யானையைத் தாக்க வேண்டி இறைவனை வணங்குகின்றார். அவ்வெற்றிலை இலையானது வேலாக மாறி யானையின் தலையில் தாக்கி ஞானத்தினை வழங்குகின்றது.
ஞானத்தினை பெற்ற ஐராவக சிகண்டி முனிவரைப் பணிந்து வணங்கி தான் செய்த தவறுகு மன்னிப்புக் கோரி தனக்காக சாபம் நீங்க வழி கூறுமாறு இறைவனை வேண்டி நின்றார். அதற்கு சிகண்டி முனிவர் ஈழத்தில் வடபால் அமைந்த வல்லி நதிக்கரையோரம் உள்ள புனிதம் நிறைந்த பூவரசம் மரத்தடியில் தியானம் இருந்து இறைவனை அடைவாய் எனக் கூறி அருளினார். அதனைக் காது குளிர கேட்ட ஐராவசு முனிவருக்கு நன்றி கூறி வடபால் நடந்து தற்போது உள்ள சந்நிதி ஆற்றங்கரை பூவரசின் கீழ் கடும் தவம் புரிந்து இறை நிலை அடைந்து முத்தி பெற்றது. அவ் முத்தி பெற்ற பூவரச மரத்தடியில் இன்றும் ஐராவசு யானையாகிய தேவலோகத் தொண்டனின் கந்தர்வன் ஐராவசு யானையின் சமாதி அமைந்துள்ளது . அவ் சமாதிக்கு மேலே நாக தேவதைகள் கருங்கற்கல் ஆகி காவல் செய்து வருகின்றார்கள்.

சிகண்டி முனிவர் பறித்து எறிந்த வெற்றிலை வேலாக மாறி ஐராவசு யானையினைத் தாக்கி ஞானத்தினை வழங்கியதை நிலைத்து நிற்கும் வகையிலே செல்வச்சந்நிதி வேலவன் வீதி உலா வரும்போது வேல் பெருமானின் நடுப்பகுதியில் வெற்றிலை இலை ஒட்டப்பட்டு வீதியுலா வருவதும் சிறப்புடைய வழிபாடாக நடைபெற்று வருகின்றது. வீரபாகு தேவர் வேல் வைத்து சந்திக்கால பூசைசெய்து புனிதமடைந்த பூவரச மரத்தடியில் இப்பொழுதும் தேவலோக தூதுவர் கந்தர்வன் ஐராவசு எனும் யானையாக சமாதி அடைந்து மேலும் புனிதம் பெற்ற இவ்விடத்தினை இவ்வழியால் சென்று வரும் மருதர் கதிர்காமர் வழிபட்டு வந்தார். மருதர் கதிர்காமர் முருகப்பெருமானால் ஞானமும் சித்தும் உடையவராக பிறந்ததினால் வேல் பெருமானின் இருப்பிடத்தினை அவரின் ஞானத்தினால் உணர்ந்து அப்படியே சென்று வரும்போது பூவரசமரக்கடியிலும் தியானம் இருந்து வழிபட்டு வந்துள்ளார். ஆகவே அவருக்கு அருள் பாலிக்க எண்ணிய முருகப்பெருமான் அவருக்கு பல சோதனைகள் கொடுத்து மேலும் தன்பால் ஈர்த்து கதிர்காமர் முன் தோன்றி நீ எனக்கு பூவரசமரத்தடியில் பூசை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கதிர்காமர் தான் பிராமணர் அல்லாத குடும்பத்தினை சேர்ந்தவர் என்பதினால் தனக்கு பூசை முறைகள் தெரியாது நான் எப்படி பூசை செய்ய வேண்டும் என முருகப்பெருமானிடத்தில் கூறினார் . அதற்கு முருகப்பெருமான் நீ இப்பொழுது கண்களை மூடித்திற எனக்கூறினார். கதிர்காமரும் முருகப்பெருமான் கூறியதைப்போல் கண்களை மூடித்திறந்தார். என்ன ஆச்சரியம் கதிர்காமர் கண்களை மூடும் போது சந்நிதிப்பகுதியில் நின்றவர் கண்களைத் திறக்கும்போது கதிர்காமத்தில் நின்றார். அங்கே கதிர்காமத்தில் நடைபெறும் வாய்கட்டி பூசை செய்யும் முறைகளை முருகப்பெருமான் கதிர்காமருக்கு காண்பித்து விளக்கமும் கொடுத்து வெள்ளி வேல் ஒன்றையும் கதிர்காமரிடம் கொடுத்து இதனை பூவரசம் மரத்தடியில் வைத்து பூசை செய்யக் கூறி மறுபடியும் கண்களை மூடித் திறக்கப் பணித்தார். மீண்டும் கண்களை மூடித்திறக்கும் போது கதிர்காமர் சந்நிதிப் பூவரசமரத்தடியில் நின்றார். அன்றிலிருந்து மருதர் கதிர்காமர் முருகப்பெருமான் வழங்கிய வெள்ளி வேல் பெருமானுக்கு விளக்கேற்றி தூய்மை செய்து வரலானார். கதிர்காமர் சிறப்பான முறையில் பூசைகள் செய்து வந்தாலும் தனக்கு ஏற்படும் சந்தேகங்களை முருகனிடத்தில் கேட்டுக் கொள்வார். பூவரசம் மரத்தடியில் வைத்து



வணங்கும் வேல்பெருமானுக்கு மழை நீர் , வெய்யில் படாமல் பனையோலையால் குடிசை அமைத்து வணங்கி வந்தார் . அவ்வாறே பூசை முடிந்து விபூதி கொடுக்கும் முறை தெரியாது கதிர்காமர் அவஸ்த்தைப்பட" கதிர்காமா அஞ்சாதே விபூதியை நீ எடு அதை நான் கொடுக்கிறேன்" என கூறினார். அதேபோல் கதிர்காமரும் செய்து வரலானார்.

அதேபோல் இன்றும் ஆலய பூசை முடிவுற்றதும் அடியார்களுக்கு விபூதி பிரசாதம் கொடுக்கப்படுகிறது. அடியார்களின் தலையில் முருகப்பெருமானே விபூதி இட்டு ஆசிர்வதிப்பதாக அடியார்கள் மகிழ்ச்சி அடைந்து முருகப்பெருமானின் காலில் விழுவதாக பூசகரின் காலில் விழுந்தும் வணங்கி வருகின்றார்கள். முருகப் பெருமானிடத்தில், கதிர்காமர் எவ்வாறு அமுது படையல் செய்வது என முருகனிடத்தே கேட்க முருகப்பெருமான் கூறினார். " நீ ஆலமிலையில் அமுது படைத்துக்கொள். அவை 63 நாயன்மார்களுக்கும் ஒன்று எனக்கும் மற்றயது உனக்கும் "என்றார். அதே போல் 65 ஆலமிலையில் அமுது படைத்து 63 நாயன்மார்களாக ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பலர் அதனை பிரசாதமாகப் பெற்றுக் கொள்கின்றனர் . பல அடியார்கள் நோய்வாய்ப்பட்டவர்கள் என பலர் இங்கு தங்கி நின்று சந்நிதியானின் ஆற்றில் நீராடி , பூவரசமரத்தடியில் தியானம் இருந்து மூலஸ்தானத்தில் அபிசேகம் செய்யும் தீர்த்தத்தினை கோமயத்தில் ஏற்றிப் பருகியும் உடலில் பூசியும் , நெய்வேத்தியமான ஆலமிலைப் பிரசாதத்தினை உண்டு தீர்க்க முடியாத நோய்களையும் நீங்கப் பெற்று நல்வாழ்வுதனை அடைந்துள்ளார்கள்.

முருகப்பெருமானும் கதிர்காமரும் ஆலய வாசல்பகுதிக்கு இருபக்கமும் இருந்து உரையாடுவார்கள். இதனால் செல்வச்சந்நிதியில் ஆலயத்திற்கான பிரதான பாதையை விட பிரதான பாதைக்கு இடது பக்கமுள்ள நாவல் மர வாசல் பகுதியூடாக உள்ளே சென்று ஆலயப் பரிவாரங்களை சுற்றி வழிபாடாற்றி பிரதான பாதைக்கு வலது பக்கமுள்ள கதிர்காம முகப்பு வாசல் வழியே வெளியேறுகிறார்கள். இவ்வாறே இன்றும் அடியார்கள் அதிகமாகப் பாவித்து வருகின்றனர். முருகப்பெருமானிடம் கதிர்காமரும் உரையாடிக் கொண்டிருக்கையில் குறுக்கே செல்லக் கூடாது என்பதனால் இவ்வழக்கம் நடைமுறையில் உள்ளது . பெரும்பாலும் விடயம் தெரிந்த அடியார்களினால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மருதர் கதிர்காமருக்கு முருகப்பெருமான் கூறுகின்றார்.
நாளை கதிர்காமக் கோயில் கொடியேற்றம் ஆரம்பமாகின்றது . என்னைப் பயணம் அனுப்பி வைக்குமாறு கூறுகின்றார். அதற்கு கதிர்காமரும் தயாராகின்றார் . பிரயாணம் செல்லும் போது கொண்டு செல்வதற்குரிய உழுத்தம் பிட்டு தயாரித்து நெய்வேத்தியம் செய்து பயணப்பிட்டும் கொடுத்து ஆலயத்திலிருந்து சிறிது தூரம் முருகப் பெருமானுடன் வந்து வழியனுப்பி வைக்கின்றார். அதன் பின் நீண்ட நாட்களுக்கு பின் ஒரு நாள் இரவு மருதர் கதிர்காமரை நித்திரையில் இருந்து எழுப்பி நான் வந்து விட்டேன் எனக்கு பசியாகவும், களைப்பாகவும் உள்ளது . எனக்கு சாப்பிடுவதற்கு ஏதாவது வழங்குமாறு கேட்டுக்கொள்கிறார். கதிர்காமரும் அச்சமயம் வீட்டிலிருந்த பொருட்களான பயறு, சர்க்கரை , தேங்காய் இவற்றைக் கொண்டு பயற்றம் துவையல் செய்து சாப்பிடவும், தாகத்திற்கு அருகில் இருந்த தென்னையில் இளநீரும் பறித்துக் கொடுத்து சந்நிதி வேலவனின் பசியையும் , தாகத்தினையும் தணித்து ஆலயத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டார்கள்.
இவ் நிகழ்வுகளே இன்றும் மருதர் கதிர்காமரின் வழித்தோன்றல்களினால் ( சந்நிதிப் பூசர்கள் ) இன்றும் அதேபோல் கதிர்காமக் கொடியேற்றத்திற்கு பயணப்பூசையும் செய்து உழுத்தம் பிட்டு வழங்கும் நடைமுறையும் கதிர்காம தீர்த்தத்தில் அன்று இரவு பூசை முருகப்பெருமான் வந்து சேர்ந்ததை பூசகர்களுக்கு அருள் பூசை ஆரம்பமாகி நடைபெற்று பயிற்றம் துவையலும் இளநீரும் நெய்வேத்தியமாகப் படைக்கப்படுகின்றது.



இவ்வாறாக பூசைகள் சிறப்பாக நடைபெற சந்நிதி வேலவனை நாடி சித்தர்களும் , யோகிகளும் , ஞானிகளும் , முனிவர்களும் , சுவாமிகளும் , பக்தர்களும் அடியவர்களாக வரத்தொடங்கினார். இவ்வாறாக வருகை தந்த சித்தர்களும் , முனிவர்களும் , சுவாமிகளும் ஆலயச் சூழலில் மரநிழலில் குடிசைகள் அமைத்து தியானம் இருந்தனர் . அவர்கள் தியானம் இருந்து இறைநிலை அடைந்த இடங்கள் அனைத்தும் இன்று அன்னதான மடங்களாக காட்சி தருகின்றது . பக்தர்களும் அதிகமாக வர ஆரம்பித்ததினால் அதிக நேரத்தினை ஆலயத்தில் அடியார்கள் செலவு செய்தார்கள். இதனால் அவர்களுக்கும் உணவுக்காக நேரம் செல்வதினால் ஆலயத்தில் முருகப்பெருமானுக்காக படைக்கப்பட்ட நெய்வேத்தியம் ஆரம்பத்தில் வழங்கப்பட்டது. பின்னர் அது போதாது நிலை ஏற்படவே . மகேஸ்வர பூசை செய்யப்பட்டு அடியார்களுக்கு அன்னதானம் ஆலயத்தில் முதலில் வழங்கப்பட்டது. அதன் பின் ஆலயத்தில் வழங்கப்படும் அன்னதானம் அதிகளவான அடியார்களுக்கு ஒரே சமயத்தில் வழங்க முடியாத நிலை ஏற்பட்டபோது ஆலய சூழலில் அன்னதான மண்டபங்கள் , மடங்கள் ஆகின.

கதிர்காமர் அமைத்த ஓலைக் குடிசையும் கதிர்காமரின் வழித்தோன்றல்களான சந்ததிப் பூசகர்களின் முயற்சியால் அடியார்களின் நேர்த்திக் கடன்களுக்கான கொடுப்பனவுகள் மூலமும் காணிக்கைகள் மூலமும் ஆலயக் கற்கள் மூலமும் கட்டப்பட்டு இன்று பெரும் ஆலய உயரமான மணிக் கோபுரம் உயரமான நேர்முட்டியும் அருள் பாலிப்பது சைவ பெருமக்களாகிய எமக்கு பெருமையே . எம்பெருமானுக்காக மிக உயர்ந்த தேர் ஒன்றினை தேர்த்திருப்பணி சபை செய்ய ஆரம்பித்து வெள்ளோட்டமும் அவ்வருடத்திற்கான தேர் உற்சவமும் நடைபெற்றது . அவ்வருடம் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இலங்கையில் மிக உயரமான தேர் ஆகவும் உலகத்தில் மிக உயரமான தேர் எனும் மூன்றாவது இடத்தில் இருந்த தேர் எரிக்கப்பட்டு சாம்பலாகியது. சந்நிதி வேலவனின் அழகிய சித்திர தேர் செய்வதற்கு முன்னர் இருந்த கட்டுத் தேரில் வீதி உலா வந்த முருகப் பெருமான் தேர் எரிந்த பின்பும் 2002 ம் ஆண்டுவரை கட்டுத்தேரில் வீதி உலாவந்து அருள் பாலித்தார். 2000 ம் ஆண்டு கட்டுத் தேர் ஆலயத்திற்கு மேற்கு வாசல் பகுதிக்கு வருகையில் குடை சாய்ந்தது. அதனால் அடியார்களின் பெரும் ஒத்துழைப்பாகவும் அப்போது இந்து கலாச்சார அமைச்சராக இருந்த தி . மகேஸ்வரனால் நிதி ஒதுக்கப்பட்டு ஆலய உரிமையாளர்களின் முயற்சியாலும் சந்நிதி வேலவனுக்கு புதிய சித்திரத்தேர் ஒன்றும் விநாயகப்பெருமானுக்கு ஒரு சித்திரத்தேரும் புதிதாக ஒரு வருடத்துக்குள் அமைக்கப்பட்டு 2004 ம் ஆண்டு இரு தேர்களும் வெள்ளோட்டம் கண்டும் மகோற்சவத்தின் தேர் உற்சவத்தின் போதும் வீதி உலாவந்து அடியார்களுக்கு அருள் பாலித்தருளினார். தொடர்ந்து தேர் உற்சவத்தின் போது சண்முகப்பெருமான் வள்ளி , தெய்வானை அம்மன் சமேதரராக சகடையில் வீதி உலா வந்த காரணத்தினால் சண்முகப்பெருமானுக்கும் ஆலய நிர்வாகத்தினால் புதிய தேர் செய்யப்பட்டு 2008 ம் ஆண்டு வெள்ளோட்டமும் தேர் உற்சவமும் நடைபெற்றது. தற்போது மூன்று தேர்களும் பழைய தேர்முட்டியில் நிறுத்தி பாதுகாக்கப்பட்டு வந்தது. இருந்தாலும் எரியூட்டப்பட்ட தேர்முட்டிக் கட்டடம் என்பதனால் பல வருடங்கள் சென்றதனாலும் கட்டடம் இடிந்து வந்தது . இதனால் இதனை இடித்துப் புதிதாக கட்டவேண்டும் எனப் பொறியியலாளர்கள் கூறினார். புதிய தேர்முட்டிக் கட்டத்தை கட்டுவதற்கும் சந்நிதி வேல்ப்பெருமான் அருளாசியினை வழங்கிடவே 2017 ம் ஆண்டு மகோற்சவம் முடிவுற்றதும் தேர்கள் ஆலய வடக்கு வீதியில் நிறுத்தப்பட்டு எரிந்த பழைய தேர்முட்டி முற்றாக இடித்து அகற்றப்பட்டு முழுவதும் புதிதாக தேர்முட்டி கட்டப்பட்டு 2018 இல் அத்தேர் முட்டிக்கட்டடத்தில் தேர் உற்சவத்திற்கான விழாக்கள் சிறப்பாக நடைபெற்று 2019 ம் ஆண்டு தேர்முட்டி வேலை முழுமையாக பூரணப்படுத்தப்பட்டு நிறைவேறியது.



மருதர் கதிகாமர் முதல் அவருடைய சந்ததி வழி உரிமைப் பூசகர்களினால் இன்றும் மரபு மாறாத பூசை முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றது . அனைத்து விடயங்களையும் செல்வச் சந்நிதி வேலவனே செய்கின்றார். நாம் அதன் சிறு அங்கமாக உள்ளமையினை இட்டு மிகப்பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

# நல்லூரான் பக்தர்கள் பசியாற தெல்லியூர் தேவியின் அன்னதானம்



தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்த்தானம் நல்லூர் கந்தனின், வருடாந்த உற்சவ காலத்தில், நல்லூரில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில் 25 நாட்களும் பக்தர்களின் நன்மை கருதி அன்னதானம் வழங்கும் அறப்பணியை பல ஆண்டுகளாக செய்து வருகின்றது.

பல தூரப் பிரதேசங்களில் இருந்தும் பல ஆயிரம் பக்தர்கள் நல்லூர் கந்தனின் தரிசனம் காண வருவதனால் அவர்களுக்கு அன்னதானம் வழங்கும் அறப் பணியை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் இந்த ஆண்டும் சிறப்பாக மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அன்னத்திலிருந்து தான் இந்த பிரபஞ்சத்தில் இருக்கும் அத்தனை உயிர்களும் சக்தியுற்று கிடக்கின்றன. எனவே இயன்றவரை ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் அதிக அளவு அன்னதானத்தை செய்ய வேண்டும் என்று தர்ம நூல்கள் கூறுகின்றன.


உணவு அளித்தல் என்பதும் ஒருவருக்கு உயிரைத் தருவது போலத்தான்.அன்னத்தால் பிராணனையும், பிராணனால் பலத்தையும், பலத்தால் தவத்தையும், தவத்தால் புத்தியையும், புத்தியால் மனத்தையும், மனத்தால் சாந்தியையும், சாந்தியால் சித்தத்தையும், சித்தத்தால் நினைவையும், நினைவால் ஸ்திதப் பிரக்ஞையையும், ஸ்திதப் பிரக்ஞையால் விஞ்ஞானத்தையும், விஞ்ஞானத்தால் ஆத்மாவையும் பெற முடியும் என்கின்றன ஞானநூல்கள். ஆக, மேற்கண்ட அனைத்தையும் அன்னதானம் கொடுப்பதால், தானங்களில் மிக உயர்ந்ததாக இது போற்றப்படுகிறது.

உயர்ந்த அறப் பணியாகிய அன்னதானப் பணியை வாரத்தின் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய இரு நாட்களும் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் மேற்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் நல்லூர் கந்தன் உற்சவ காலத்திலும் இந்த அறப்பணியை தேவஸ்தானம் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

# சந்நிதியில் கல்வெட்டு திரை நீக்கம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வரலாறு அடங்கிய கல்வெட்டு ஆலய உள்வீதியின் தெற்கு பகுதியில் ஆறுமுகசுவாமி வாசலுக்கு அண்மையாக ( 04.08.2024 )ஆலய பூசகர் த.தயாபரன் ஐயர் தலைமையில் நடைபெற்ற புண்ணியான பூசையின் பின்னர் திரை நீக்கம் செய்யப்பட்டது.






# விழாக் கோலம் பூண்டுள்ள நல்லையம்பதி











உலகப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த திருவிழா வெள்ளிக்கிழமை 9ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் இனிதே ஆரம்பமானது.


தொடர்ந்து இருபத்தைந்து தினங்களுக்கு திருவிழா நடைபெறவுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 25ஆம் திகதி அருணகிரிநாதர் திருவிழாவும் 26ஆம் திகதி மாலை கார்த்திகை திருவிழாவும் 27ஆம் திகதி காலை சூர்யோற்சவ திருவிழாவும் 28ஆம் திகதி காலை சந்தானகோபலர் திருவிழாவும் அன்றையதினம் மாலை கைலாசவாகன திருவிழாவும் நடைபெறவுள்ளன. 29ஆம் திகதி காலை கஜவல்லி, மஹாவல்லி திருவிழாவும் அன்றையதினம் மாலை வேல் விமானம் (தங்கரதம்) பவனியும் 30ஆம் திகதி காலை தண்டாயுதபாணி திருவிழாவும் அன்றையதினம் மாலை ஒருமுக திருவிழாவும் 31ஆம் திகதி மாலை சப்பர திருவிழாவும் நடைபெறவுள்ளன.

முதலாம் திகதி தேர் திருவிழாவை தொடர்ந்து செப்டெம்பர் 2ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் அன்றையதினம் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. செப்டெம்பர் 3ஆம் திகதி மாலை பூங்காவன திருவிழாவும் மறுநாள் வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளதாக, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.









# நல்லைக் குமரன் மலரின் 32 ஆவது இதழ் வெளியிட்டு வைப்பு



நல்லூர் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக் குமரன் மலரின் 32 ஆவது இதழ் வெளியீட்டு விழா 15.08.2024 வியாழக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குண ராஜா பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட ஓய்வுநிலை அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். யாழ். மாநகர சபையின் ஆணையாளர் ந. கிருஷ்ணேந்திரன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் சிறிசற்குணராஜா ஆகியோர் இணைந்து நல்லைக் குமரன் மலரை வெளியிட்டு வைக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய நிர்வாகம் சார்பாக இ. இராதாகிருஷ்ணன் முதற் பிரதியை சம்பிரதாய பூர்வமாகப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து விருந்தினர்களுக்கான பிரதிகள் வழங் கப்பட்டன. அத்துடன் நல்லைக் குமரன் மலருக்கான ஆக்கங்களை வழங்கிய அனை வருக்குமான சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.வை.விஜயபாஸ்கர் நல்லைக்குமரன் மலரின் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் விரிவுரையாளர் த.அஜந்தகுமார் மலரின் ஆய்வுரையையும் ஆற்றினர்.

குறித்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வீணாகான குருபீடப் பீடாதிபதி சிவஸ்ரீ.சபா வாசுதேவக் குருக்கள், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர்களான பேராசிரியர் நா.சண்முகலிங்கன், வாழ் நாள் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை மற்றும் பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ், யாழ்.மாநகரச் பையின் முன்னாள் ஆணை யாளர்களான இ.த ஜெயசீலன். வே.பொ.பாலசிங்கம், மூத்த ஆன்மிகவாதி கலாபூஷணம் இராசையா சிறிதரன், யாழ்.மாந கரசபை அதிகாரிகள், உத்தி யோகத்தர்கள், பல்துறை சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# தொழிற்பயிற்சியில் ஈடுபடும் சிவபூமி மாணவர்கள்

எமது சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள் தொழிற்பயிற்சி செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் சமூகத்தில் அவர்களும் தமக்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.



இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(ஆவணி 2024) ISBN-978-955-7420-00-4